www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

## தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

4

மகாவம்சம் குறிப்பிடுவது போலவோ அல்லது இன்றைய சிங்கள வரலாற்றாசிரியர்கள் மகாவம்சத்தை மேற்கோள் காட்டி நிறுவ முற்படுவது போலவோ கி.மு. 6-ம் நூற்றாண்டில் விஜயன் என்ற ஆரிய இளவரசன் வந்து, குவேனி என்ற இயக்கர் குலப் பெண்ணை மண -ந்தவுடன் 300 ஆண்டுகளுக்குள் அதாவது முதலாவது பௌத்த மன்னனான தேவநம்பிய தீசன் காலத்துக்குள் சிங்கள இனமும், சிங்கள மொழியும் தோன்றிவிட்டதாகச் சொல்வது எற்றுக்கொ



சேதவனராம விகாரையில் உள்ள நாக வழிபாட்டுச் சின்னங்கள்

-ள்ள முடியாத வெறும் கற்பனையேயன்றி வேறில்லை. சிங்கள பௌத்த வரலாற்றின் தொடக்க காலம் என்று சொல்லப்படுகின்ற கி.மு. 3-ம் நூற்றாண்டில் கல்வெட்டுகளும் சாசனங்களும் எழுதப் பயன்படுத்தப்பட்டு "பிராமி" எழுத்துக்கள் தமிழ் மொழிக்கும் வட பிராமி எழுத்துக்கள் வட மொழியான பிராகிருத மொழிக்கும்(1) (பாளி மொழி) உரியவை என அடையாளம் காணப்பட்டுள்ளன.(2) இதைவிட சிங்கள மொழி தோன்றியதாக சொல்லப்படும் காலத்திற்கு பல நூற்றா -ண்டு காலம் பிந்தித் தோன்றிய மலையாள மொழி இலக்கண இலக்கிய அடிப்படையில் பெற்றிருக்கும் வளர்ச்சி சிங்கள மொழி[யி]த இல்லாதிருப்பது, அதன் [தோ]ற்றக் காலம் பற்றிய சந்தேக[த்]தை தோற்றியிருப்பதாக மொழியியலாளர்கள் கூறுகிறார்கள்.(3)

**மகாவம்சமும் சிங்களவர்களும் தங்களுடைய மூதாதையரும் முதல் பௌத்த மன்னனும் என்று போற்றிக் கொண்டாடுகின்ற தீசன் ஒரு திராவிட (தமிழ்) மன்னன் என்றே கருதப்படுகிறது. இவன் தன்னுடைய பெயருடன் அசோகனுடைய பட்டப் பெயர்களில் ஒன்றான "தேவநம்பிய" என்பதைச் சேர்த்துக் கொண்டாலும் புத்த மதத்தை தழுவுவதற்கு முன் இந்து மதத்தை கடைப்பிடித்தவன் என்று சொல்லப்படுகிறது. இவனது தந்தையின் பெயர் மூத்தசிவன் என்பதாகும்.**

## வைதீக இயற்கை [ம]த முரண்பாடுகள்

உண்மையில் மகாவம்சம் குறி[ப்]பிடும் விஜயன் கதையை புனைகதை என்று தள்ளிவிட்டாலும் அக்காலத்திலோ அல்லது அத -ற்கு முன்போ ஆரிய, திராவிட கலப்பு இலங்கையில் நிகழ்ந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் கி.மு 3-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிச் சாசனங்கள் சிலவற்றில் அக்கால -த்தில் சமூகத்தில் ஆளுமை பெற்ற நிலையில் இருந்த பிராமணர்களைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. "பிராமணர்கள்" என்பது திராவிடர்களுக்குச் சொந்தமான இனக்குழுவினதோ அல்லது சமூகக் குழுவினதோ பெயர் கிடையாது. அது ஆரியர்களுக்கு மட்டுமே சொந்தமான ஒரு சாதி (வர்ணம்) யின் பெயராகும். ஆரிய சமூகக் குழுக்களில் யுத்தம் செய்வோர் ஒரு பிரிவாகவும், யாகங்கள் வேள்விகள் நடத்துவோர் ஒரு பிரிவாகவும், ஏற்பட்ட முதலாவது வேலைப் பிரிவினையின் அடிப்படையில்



தோற்றம் பெற்றவர்களே பிராமணர்கள் ஆவர். ஆதாவது யுத்தம் புரிவோர் சத்திரியர்கள் என்றும் அந்த யுத்தங்களுக்கு ஆசிவேண்டி வேள்விகளும், யாகங்களும் நடாத்துவோர் பிராமணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். தொடக்க காலத்தில் சத்திரியர்களே மேன்மையானவர்களாக இருந்தாலும் நாளடைவில் புனிதம் தீட்டு, அக மணக் கொள்கை என்பவற்றின் அடிப்படையில் பிராமணர்கள் தங்களை மற்றவர்களிடமிருந்து தனிமைப் படுத்திக் கொண்டு சமூகத்தின் அதி உயர் -ந்த பிரிவினர் என்ற ஸ்தானத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அத்தோடு மனிதனை பிற -ப்பைக் கொண்டும் குலத் தொழிலைக் கொண்டும் சாதியாகப் பிரித்து சமூகத்தில் தங்களுடைய ஆளுமையை அவர்கள் நிலை நிறுத்திக் கொண்டார்கள். பிராமணர்களால் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட சத்திரியர்களது எழுச்சியே புத்த மதத்தின் தோற்றமாகும். கௌதம புத்தர் ஒரு அரசகுமாரன் என்பது இங்கு குறிப்பிட்டத் தக்கது.

எனவே இராமாயண காலத்தில் அல்லது அதற்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கைக்கு வந்த பிராமணர்கள். இங்கிருந்த இயற்கை வழிபாட்டு முறைகளையும், சைவ வழிபாட்டு முறைகளையும் தங்களது வைதிக சடங்குகளுக்கு உட்படுத்த முற்பட்டபோது, அங்கு ஒரு இயல்பான முரண்பாடு தோன்றியிருக்க சாத்தியமுண்டு. பொதுவாக தங்களைவிட மற்றவர்கள் பிறப்பால் இழிவாவானவர்கள் என்ற கருத்துடைய பிராமணர்களே இலங்கையில் வாழ் -ந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்களான திராவிடர்களை நாகரீகமற்ற இயக்கர்கள் என்றும் நாகர்கள் என்றும் இழிந்துரைத்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

## வைபமாலை சொல்லும் முக்குவர் கதை

கீரிமலையில் உள்ள நகுலேஸ்வரம் கோயிலுக்கு அண்மையில் குடியிருந்த முக்குவர்கள்(4) கடலில் மீன்பிடித்து வந்து கோவிலுக்கு அண்மையில் உள்ள கடற்கரையில் காயப்போட்டதாலும் கோவில் கிணறுகளில் தண்ணீர் அள்ளியதாலும் தங்களுடைய ஆசாரத்துக்கு பங்கம் வந்துவிட்டதாக கோபங்கொண்ட பிராமணர்கள் கோயிலுக்கு பூசை செய்ய மறுத்து, அக்காலத்தில் கண்டியில் இருந்து ஆட்சி செய்த பாண்டு மகராஜன் என்பவனிடம் முறையிட்டதாகவும் அவன் அந்த முக்குவர்களை அங்கிருந்து அடித்துத் துரத்திவிட அவர்கள் மட்டக்களப்பிலுள்ள பானகை, வலையிறவு ஆகிய இடங்களுக்குப் போய் குடியேறியதாக வைபவ மாலையில் சொல்லப்படுகிறது.(5) வைபவமாலை சொல்லும் பாண்டு மகராஜன் காலம் கி.பி. 491 என்று வரையறுக்கப் பட்டாலும் வைதிக பிராமணர்களுக்கும் இயற்கை வழிபாட்டு முறையைக் கைக்கொண்டு இங்கு வாழ்ந்த தமிழ் பூர்வீக குடிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டிற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

## பௌத்த மதத்தின் வருகை

இலங்கைக்கு புத்த மதத்தின் வருகை என்பது தற்செயலாக நடந்த ஒன்றாக கருத முடியாது. இந்தியாவில் பிராமணிய ஆதிக்கத்திற்கு எதிராக புத்த மதம் பரவியதைப் போலவே இலங்கையிலும் பரவியது. மகாவம்சம் குறிப்பிடுவது போல் அசோகனுடைய ஆட்சிக் காலத்தில் மௌரிகத் தலை நகரிலிருந்து நேரடியாக வான் வழியாக இலங்கைக்கு பௌத்த மதம் கொண்டுவரப்படவில்லை. அசோகனது ஆட்சிக் காலத்திற்கு முன்பே தென்னிந்தியப் பகுதிகளில் பௌத்த மதக் கருத்துக்கள் பரவியிருந்தன. தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சிக் கால -த்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்ற மதங்களாக இருந்துள்ளன. தமிழ்நாட்டிலு -ள்ள காஞ்சிபுரம், காவேரிப்பூம் பட்டினம், புத்தகாஞ்சி மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்கள் முக்கியமான பௌத்த வழிபாட்டு மையங்களாக இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். நால்வகை நிலப்பிரிவினை அடிப்படையிலான இயற்கை வழிபாடும், சிவ வழிபாடும் நிலவிய தமிழ் நாட்டில் வைதீக இந்துமதத்தினதும், பிராமணிய ஆதிக்கத்தினதும் தாக்கம் தமிழ் மக்களை சமண, பௌத்த மதங்களின் பால் நாட்டங் கொள்ள வைத்தது. சங்க இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி, முதலானவற்றில் அக்காலத்தில் தமிழகத்தில் பௌத்த மதம் பெற்றிருந்த செல்வாக்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கையில் பௌத்த மதம்

இலங்கைக்கு பௌத்த மதம் கி.மு. 3-ம் நூற்றாண்டில் தேவநம்பிய தீசன் காலத்தில் கொண்டு வரப்பட்டதாக சொல்லப்படுகிறது. அசோகனது மகன் மகிந்தன் வான் வழியாக இலங்கைக்கு வந்து தேவநம்பிய தீசனைச் சந்தித்து அவனை பௌத்த மதத்தி -ற்கு மாற்றினான் என்றே மகாவம்சம் சொல்கிறது. ஆனால் மகி -ந்தன் தமிழ் நாட்டுக்கு வந்து காவிரிப் பூம்பட்டிணத்தில் தங்கியிருந்து அங்கு ஒரு விகாரையை கட்டியதாக வரலாற்று அறிஞர்கள் சொல்கிறார்கள். காவிரிப் பூம்பட்டிணத்தில் அகழாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட கால -த்தால் முந்திய விகாரை மகிந்தனால் கட்டப்பட்ட விகாரை என்றே தொல்லியலாளர்கள் கருதுகிறார்கள்.(6) எனவே மகிந்தன்



நிற்கின்ற நிலையிலுள்ள புத்தர் சிலை

தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வந்து அங்கிருந்தே அவன் அனுராதபுரத்து -க்குச் சென்றதாக தமிழ் வரலா -ற்று அறிஞர்கள் நம்புகிறார்கள்.

## தேவநம்பிய தீசன் தமிழ் மன்னன்

மகாவம்சமும் சிங்களவர்களும் தங்களுடைய மூதாதையரும் முதல் பௌத்த மன்னனும் என்று போற்றிக் கொண்டாடுகின்ற தீசன் ஒரு திராவிட (தமிழ்) மன்னன் என்றே கருதப்படுகிறது. இவன் தன்னுடைய பெயருடன் அசோகனுடைய பட்டப் பெயர்களில் ஒன்றான "தேவநம்பிய" என்பதைச் சேர்த்துக் கொண்டாலும் புத்த மதத்தை தழுவுவதற்கு முன் இந்து மதத்தை கடைப்பிடித்தவன் என்று சொல்லப்படுகிறது. இவனது தந்தையின் பெயர் மூத்தசிவன் என்பதாகும். இவனுடைய ஆட்சிக் காலத்தில் இருந்த மொழியை சிங்களம் என்று சொல்ல முடியாது. அதற்கான எந்தச் சான்றுகளும் கிடையாது. வரலாற்றறிஞர்கள் பலர் அக்காலத்தில் வழக்கிலிருந்த மொழியை பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த திராவிட மக்களுக்குரிய "எலு" மொழியென்று குறிப்பிடுகிறார்கள். இதை "ஈழ" பாசை என்பதுதான் "எலு" என்று திரிவுபட்டு சொல்லப்பட்டதாகவும் சிலர் சொல்கிறார்கள். இந்த "எலு" மொழி அல்லது "ஈழ" மொழி என்பது தமிழ் மொழியின் கிளை மொழி என்றும் பிரதேச வழக்கு மொழி என்றும் கூட சொல்லப்படுகிறது. ஒரு மொழி என்பது ஒரு இனக்குழுவின் தனி ஒரு மொழியாக உருவெடுப்பதற்கு முன் பல்வேறு பிரதேச மொழி வழக்குகளையும் கிளை மொழிகளையும் கொண்டிருக்கும் என்பதாகும். ஒரு சமூகம் என்ற அடிப்படையில் அந்த இனக்குழு வளர்ச்சியடைவதைப் பொறுத்து, அந்த மொழியும், இலக்கண ரீதியாக ஒருங்கிணைக்கப்படும்போது, தனி ஒரு மொழியாக வளர்ச்சியடைகிறது என்பதும் சமூகவியலாளர்களது கருத்தாகும்.(7) எனவே தேவநம்பிய தீசன் காலத்தில் வழக்கிலிருந்த மொழி தமிழ் மொழி அல்லது அதன் அங்கமான கிளை மொழி(8) என்றே கொள்ள வேண்டும்.

1. வைதீக இந்து மதத்தின் மொழியாகச் சமஸ்கிருதம் இருந்தது போல பௌத்த மத மொழியாக பிராகிருத மொழி என்னும் பாளி மொழி இருந்தது.
2. பேராசிரியர் ப. புஷ்பரத்தினம் - ஆதிகால இலங்கைத்தமிழர் வரலாறு.
3. மலையாள மொழியின் தோற்றக் காலம் கி.பி 6முதல் 8ம் நூற்றாண்டு என நம்பப்படுகிறது. கேரளத்தில் ஈழவர்கள் என்ற தலைப்பில் 1983ல் செ.வேணு கோபாலன்நாயர் எழுதிய கட்டுரை.
4. முக்குவர்கள் என்பது கடலும் கடல் சார்ந்த நிலமுமான நெய்தல் நிலத்தில் வாழ்ந்து வந்த தமிழ் இனக் குழுவான பரதவரைக் குறிப்பதாகும்.
5. யாழ்ப்பாண வைபவமாலை- முதலியார் குலசபாநாதன்
6. பேராசிரியர் ப. புஷ்பரத்தினம் ஈழத் தமிழர் வரலாறு.
7. மனித சமூகசாரம் - ஜோர்ஜ் தாம்சன்.
8. கிளை மொழி என்பது எழுத்து வழக்கில் இல்லாமல் சில பிரதேச மக்களிடையே வாழ் மொழி ரீதியில் வழக்கிலிருக்கும் மொழியாகும்.

**- நக்கீரன்**